**மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு, ஜூன்/ஜூலை 2023**

**அரசுத் தேர்வு சேவை மையங்களுக்கான அறிவுரைகள்**

நடைபெறவுள்ள ஜூன்/ஜூலை 2023, மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுகளுக்கு சேவை மையங்களில் (Service Centres) தனித்தேர்வர்கள் ஆன்-லைனில் பதிவு செய்யும் போது தகுதியான தனித்தேர்வர்களை அனுமதிப்பதற்கான அறிவுரைகள் :-

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர்**

| தனித்தேர்வர் வகை | விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர் | தேர்வுக் கட்டணம், இதர கட்டணங்கள் மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களில் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் (HSE SECOND YEAR ARREAR) | ❖ மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வினை ஏற்கனவே பழைய நடைமுறையில் / புதிய நடைமுறையில் எழுதி தேர்ச்சி பெறாத தனித்தேர்வர்கள் தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுத விண்ணப்பிக்கலாம்.<br>(HSE SECOND YEAR ARREAR OLD / NEW PATTERN) | தேர்வுக் கட்டணம் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/- இதரக் கட்டணம் ரூ.35/- மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/- (உ-ம்)<br>ஒரு பாடம் ரூ.50 + 35 + 70 = 155/-<br>இரு பாடங்கள் = 205<br>ரூ.100 + 35 + 70 = 205<br>**தக்கல் கட்டணம் ரூ.1,000/** |
| கடந்தாண்டுகளில் மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வினை நேரடித் தனித்தேர்வராக எழுதி தேர்ச்சிப் பெற்று / பெறாமல் மேல்நிலை | ❖ ஏற்கனவே மேல்நிலை முதலாமாண்டு தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்ற தேர்வர்கள் அனைவரும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.<br>(HSE SECOND YEAR) | <u>HSE SECOND YEAR</u><br>தேர்வுக் கட்டணம் ரூ.150/-<br>இதரக் கட்டணம் ரூ.35/-<br>ஆன்-லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/-<br>மொத்தக் கட்டணம் ரூ.255/-<br>**தக்கல் கட்டணம் ரூ.1,000/-** |

| | | |
|---|---|---|
| இரண்டாமாண்டு தேர்வினை முதன் முறையாக எழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் (HSE SECOND YEAR) | ❖ கடந்த ஆண்டு அல்லது அதற்கு முன்னர் முதன்முறையாக நேரடி தனித்தேர்வராக மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள், தற்போது மேல்நிலை முதலாமாண்டு தேர்ச்சி பெறாத பாடங்களை எழுத விண்ணப்பிக்கும்பொழுது, அத்துடன் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் அனைத்துப் பாடங்களையும் எழுதுவதற்கும் கண்டிப்பாக விண்ணப்பிக்க வேண்டும். (HSE FIRST YEAR ARREAR & SECOND YEAR) | <u>HSE FIRST YEAR ARREAR</u><br>தேர்வுக் கட்டணம் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/- இதரக் கட்டணம் ரூ.35/- மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/- (உ-ம்)<br>ஒரு பாடம் ரூ.50 + 35 + 70 = 155/-<br>இரு பாடங்கள் = 205<br>ரூ.100 + 35 + 70 = 205<br>**தக்கல் கட்டணம் ரூ.1,000/-** |

<u>பழைய பாடத்திட்டத்திற்கு இணையாக புதிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்கள்</u>

பழைய பாடத்திட்டத்தில் கலைப்பிரிவில் உள்ள கணினி அறிவியல் , வணிகக் கணிதம் இந்தியப் பண்பாடு மற்றும் தொழிற்கல்விப் பிரிவில் உள்ள பாடங்கள் ஆகியவை புதிய பாடத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அப்பாடங்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அப்பட்டியலில் உள்ள பாடங்களில் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத தேர்வர்கள், **அப்பாடங்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களில் மட்டுமே தேர்வு எழுத வேண்டும். இப்பட்டியல் சேவை மையங்களின் விளம்பரப் பலகையில் கட்டாயமாக ஒட்டப்பட வேண்டும்.**

<u>புதிய பாடத்திட்டம்</u>

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுகள் புதிய பாடத் திட்டத்தில் 70/90 மதிப்பெண்களுக்கு மட்டுமே நடைபெறும்.** ஏற்கனவே மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத்தேர்வுகளை பழைய பாடத்திட்டத்தில் (Old Syllabus) எழுதி தேர்ச்சி பெறாதவர்கள், தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களுக்கான தேர்வுகளை மட்டும் புதிய பாடத்திட்டத்தில் எழுதவேண்டும்.

<u>மாற்றுத் திறனாளிகள்</u>

i. பார்வையற்றோர், காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் ஆகிய மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு மேற்குறிப்பிட்ட கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

ii. மாற்றுத் திறனாளிகள், டிஸ்லெக்சியா, நரம்பியல் கோளாறு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் நேரம் கோருதல் போன்ற அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகளைப் பெற விரும்பினால், தங்களது விண்ணப்பத்துடன் தனியே சலுகை கோரும் கடிதத்தையும், **<u>உரிய மருத்துவச் சான்றிதழ் நகல்களையும் கட்டாயமாக இணைத்து</u>** சமர்ப்பிக்க வேண்டும். மேலும், **மாற்றுத் திறனாளித் தேர்வர்களது விண்ணப்பத்தினை ஆன்-லைன் மூலம் பதிவேற்றம் செய்யும்பொழுது, அத்தேர்வர்கள் தேர்வெழுதக் கோரும் சலுகைகளையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

**<u>சேவை மையங்களில் விண்ணப்பிக்க நேரில் வருகை புரியும் தனித்தேர்வர்களது விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்வதற்கான அறிவுரைகள்:-</u>**

1. **www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் Notification பகுதியில் உள்ள மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேர்வர்களுக்கான அறிவுரைகளைப் பதிவிறக்கம் செய்து சேவை மையங்களின் அறிவிப்புப் பலகையில் ஒட்டுதல் வேண்டும்.**
2. சேவை மையத்திற்கு நேரில் வருகை தரும் தேர்வரது விண்ணப்பங்களை மட்டுமே இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
3. ஏற்கனவே மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுத விண்ணப்பிக்கும் தேர்வர்கள் மற்றும் முதன் முறையாக மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வெழுத விண்ணப்பிக்கும் தேர்வர்கள், **தாங்கள் ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின் / மதிப்பெண் பட்டியலின் சுய சான்றொப்பமிட்ட நகலினை (Self Attested Copy) வழங்கினால் மட்டுமே அவர்களது விண்ணப்பத்தினை பதிவேற்றம் செய்யவேண்டும்.**

4. விண்ணப்பத்தை பதிவு செய்வதற்கு, www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Click here to access Online Portal for School and Educational Offices என்ற வாசகத்தினை click செய்ய வேண்டும்.

5. அதன் பின் Hr Sec Second Year Private Nodal Login July / August-2022 என்ற வாசகத்தினை click செய்து, சேவை மையத்திற்கென வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி நுழைய வேண்டும். பின்னர் Private candidate Registration என்ற பகுதியினை click செய்து விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

6. **சேவை மையத்திற்கு நேரில் வருகை தரும் தேர்வர் பின்வரும் வகைகளுள் எவ்வகையைச் சார்ந்தவர் என்பதனைக் கேட்டு உறுதிசெய்த பின்னர் சரியான வாசகத்தை click செய்து விண்ணப்பத்தினைப் பதிவு செய்ய வேண்டும்.**

    i. **HSE FIRST YEAR ARREAR & SECOND YEAR (NPNS)** – கடந்த ஆண்டுகளில் முதன்முறையாக மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதிய தேர்வர்கள், முதலாமாண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுதுவதற்கும் / இரண்டாமாண்டு தேர்வுகளை முதன் முறையாக எழுதுவதற்கும் விண்ணப்பிப்பவர்களின் விவரங்களைப் பதிவு செய்வதற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும். (Permanent Register Number starts with 19...., 20...., 21..., 22.....)

    ii. **HSE FIRST YEAR ARREAR & SECOND YEAR ARREAR (NPOS)**– மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை பழைய பாடத் திட்டத்தில் எழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள், தற்போது மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களில் தேர்வெழுதுபவர்கள் (Permanent Register Number starts with 18 .....)

iii. **HSE SECOND YEAR ARREAR (OPOS) - ARREAR WITH PERMANENT REG NO (OLD PATTERN)**

நிரந்தர பதிவெண் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வினை 1200 மதிப்பெண்களுக்கு எழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை எழுத விண்ணப்பிப்பவர்களின் விவரங்களை பதிவு செய்வதற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

**iv. ARREAR WITHOUT PERMANENT REG NO (OLD PATTERN)**

நிரந்தர பதிவெண் இல்லாமல், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வினை 1200 மதிப்பெண்களுக்குஎழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை எழுத விண்ணப்பிப்பவர்களின் விவரங்களை பதிவு செய்வதற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும். **இவ்வகை தேர்வர்களது பெயர் மற்றும் பிறந்த தேதியினை தட்டச்சு செய்யும்போது கூடுதல் கவனத்துடன் சரியாக தட்டச்சு செய்ய வேண்டும்.**

<u>முக்கிய குறிப்பு</u>:

- **நிரந்தரப் பதிவெண் கொண்ட தேர்வர்களது நிரந்தரப் பதிவெண்ணை பதிவு செய்த பின்னர் திரையில் தோன்றும் தேர்வரது பெயர், பிறந்த தேதி மற்றும் பாடத்தொகுப்பு ஆகியவற்றை தேர்வர் உடன் எடுத்துவரும் மதிப்பெண் பட்டியலுடன் ஒப்பிட்டு சரிப்பார்த்த பின்னரே விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பத்தினைப் பதிவேற்றம் செய்வதற்கு முன்பு புகைப்படத்தை தேர்வருடன் ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டும்.**

7. தனித்தேர்வர் விவரங்களை ஆன்-லைனில் பதிவு செய்த பின்னர், பதிவு செய்ததை உறுதிப்படுத்தும் விண்ணப்பத்தினையும் (Confirmation Copy), Registration slip எனப்படும் படிவத்தினையும் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

8. விண்ணப்பத்தை ஆன்-லைனில் பதிவு செய்த பின் பதிவிறக்கம் செய்யும் விண்ணப்பத்தோடு (Application), Registration slip என்ற படிவத்தினையும், உரிய இணைப்புகளையும் இணைத்துப் பெற வேண்டும்.
9. விண்ணப்பத்தின் மேல் இடப்புறத்தில் உரிய தனித்தேர்வரின் ஸ்கேன் செய்யப்பட்ட புகைப்படம் இடம் பெற்றிருக்கும்.
10. விண்ணப்பத்தின் கீழ் தனித்தேர்வர் உரிய இடத்தில் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.
11. தேர்வுக் கட்டணத்தினைப் பணமாகச் செலுத்த தனித்தேர்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனித்தேர்வர்கள் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணத் தொகை Registration Slipல் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித்தேர்வரின் விண்ணப்பத்தினை ஆய்வு செய்து, +2 தேர்வெழுத தேர்வர் தகுதியுள்ளவர் என்று உறுதி செய்த பின்னர் தேர்வுக் கட்டணத்தை பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வரின் தகுதி குறித்து சந்தேகம் எழும் நிகழ்வுகளில் உரிய காரணத்தை தெரிவித்து தனித்தேர்வரின் விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும்.
12. Registration Slip ல் இரண்டு பாகங்கள் உள்ளது. முதல் பாகம் Department copy எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். இரண்டாம் பாகம் **candidate copy** எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித்தேர்வர்களிடமிருந்து தேர்வுக் கட்டணத் தொகையினை பெற்றபின்னர், விண்ணப்பத்தினை ஆய்வு செய்த பணியாளர் **Fees paid** எனக் குறிப்பிட்டு சுருக்கொப்பமிட வேண்டும். இப்படிவத்தில் தனித்தேர்வரும் கையொப்பமிட்டிருக்க வேண்டும் **candidate copy**யினை கிழித்து பள்ளி முத்திரையிட்டு தனித்தேர்வருக்கு வழங்க வேண்டும்.
13. பதிவேற்றம் செய்த தனித்தேர்வரது விவரத்தினை திருத்தம் செய்ய Candidate List Option-ஐ Click செய்ய வேண்டும்.
14. 20.06.2023 **அன்று** அனைத்து விண்ணப்பங்களையும் பெற்ற பின்னர் Report Section-ஐ Click செய்து, தேர்வர் வகை வாரியான விவரங்களையும், கட்டணம் தொடர்பான விவரங்களையும் பதிவிறக்கம் செய்துக் கொள்ள வேண்டும்.

**<u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) தேர்வுக்கான விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்</u> :**

| வ எண் | தேர்வர்களின் வகை | சேவை மையத்தில் தேர்வுக் கட்டணத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | ஏற்கனவே +2 தேர்வெழுதி தோல்வியுற்றோர் | **1.** இதுவரை எழுதிய மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கான மதிப்பெண் சான்றிதழ்களின் (Certificate of Marks) சான்றொப்பமிட்ட நகல் (Attested copy) / மதிப்பெண் பட்டியல்களின் (Statement of Marks) சான்றொப்பமிட்ட நகல் (Attested copy)<br>**2.** செய்முறை மதிப்பெண்களுக்கான ஆவணம் (செய்முறை அடங்கிய பாடங்களைத் தேர்வெழுதுவோர் மட்டும்) |
| 2. | +1 தேர்வெழுதிய பின் (600 மதிப்பெண்களுக்கு) முதன் முதலாக +2 தேர்வெழுதுவோர் | இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) நகல் அல்லது தேர்வுக் கூட நுழைவுச் சீட்டு (Hall Ticket) நகல். |

ஓம்/-

இயக்குநர்

நாள் :. 09.05.2023

இடம்: சென்னை – 600 006.